1990 ஏப்ரல் 5]

(ஆ) கோரிக்கை எண். 22 கால்நடை வளர்ப்பு.

திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

பேராசிரியர் க. பொன்னுசாமி மற்றும் திரு. ஆர். சிங்காரம் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 46,98,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (6—4—1990) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 14-19 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

2. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

71. கோரிக்கை எண். 21—மீன்வளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

72. மீன்வளத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் 1990-91 (ஆங்கிலம்).

73. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை 1989-90 (தமிழ்).

74. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை 1989–90 (தமிழ்).

75. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை 1989–90 (தமிழ்).

76. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை, 1989–90 (தமிழ், ஆங்கிலம்).

இணைப்பு I.

(65 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மீன் வளத்துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு.

1990–91.

1. முன்னுரை :

மனித சமுதாயத்தின் நல்வாழ்விற்கு புரதச்சத்து இன்றியமையாதது ஆகும்.

உடல் நலிந்தோருக்கு ஏற்றதாகவும் புரத சத்துள்ள உணவாகவும் உள்ளதால், மீன் ஊட்டச்சத்துள்ள உணவின் தரத்தினை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் ஊட்டச்சத்தின் குறைவினை சீர்செய்யும் நாட்பட்ட பிரச்சினைக்கு தீர்வு காணவும், வேலைத் திறனை அதிகரிக்கவும் வழி வகுக்கிறது. தமிழ்நாட்டில், அதிக அளவில் , உள்நாட்டு மற்றும் கடல் மீன் வளங்கள் உள்ளன. இந்த வளத்தினை நன்கு பாதுகாத்து வளர்த்திடவும், மீன் தொழிலையே நம்பியிருக்கும் மீனவ மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கைத் தரத்தினை சீராக்கிடவும் குறிக்கோளாகக் கொண்டு, மீனளத்துறை 1907 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பல ஆண்டுகளாக தொடர்ந்து மேற்கொண்டு வரும் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளின் பயனாக, இத்துறை மிகப் பெரிய அளவில் மீனள அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்த முடிகிறது. இந்தியாவின் மொத்த மீன் உற்பத்தியில் 15 விழுக்காடு தமிழ்நாடு உற்பத்தி செய்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது.